பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

# விடுதலை

இதழ்: 19 வியாழக்கிழமை 26-10-1989

## சமாதானக்குழுக்கூட்டம்ஒத்திவைப்பு தென்னிலங்கையில்குரூரகொலைகள்

(கொழும்பு)

நேற்றுக் கூடுவதாக இருந்த வடக்கு கிழக்கு சமாதானக் குழுக்கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி அமைச்சர் ஏ சி எஸ். ஹமீட் தலைமையில் நடப்பதாக இருந்த இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை அதிகார பூர்வமற்ற இராணுவக் குழுக்கள் செயல்பட அரசு கண்டிப்பாக அனுமதியளிக்காது என்று ஒரு ராணுவ உயரதிகாரி தெரிவித்தார். இது போன்ற இராணுவக் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவும் குறிப்பிட்டுள்ளார்

மறுபுறத்தில், கடந்த இரு நாட்களில் ஒரு ராணுவ வீரர் உட்பட தென்னிலங்கையில் 42 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர் குருநாகல் மாவட்டத்தில் ஒரு வீட்டையும் அதையொட்டிய கடையையும் ஆயுதந் தாங்கிய கும்பல் ஒன்று தாக்கி, குழந்தைகள் உட்பட 11 பேரை கொலை செய்துள்ளது. பின்னர் கட்டிடங்களினுள் போட்டு சடலங்களுக்குத் தீ வைத்தது

★ அம்பாறையில் படைவிலகலுக்குப் பின்னுள்ள நிலைமைகள் திருப்திகரம் ★ கடந்த 48 மணி நேரத்தில் அசம்பாவிதம் எதுவுமில்லை

# சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் மாகாண அரசு தீவிரம்

(அம்பாறையில் இருந்து நமது சிறப்பு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தை விட்டு இந்திய அமைதிப்படையினர் வெளியேறிய பின்னர் கடந்த 48 மணித்தியாலங்களாக எவ்வித வன்முறைகளும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடைகளிலும், சந்தைகளிலும்தீபாவளிக்கொண்டாட்டத்திற்காகமக்கள் பெருந்தொகையாககொள்வனவுகளிலும் ஈடுபடுவதைஅவதானிக்கக்கூடியதாக இருந்தது. பாடசாலைகள், தனியார்கல்வி நிலையங்கள் வழமைபோல் இயங்குவதையும் நேரடியாகப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

தம்பிலுவில், காரைதீவுச் சந்தி என்பனவற்றில் தமிழ் தேசிய இராணுவத்துடன் மக்கள் தொண்டர் படையினர் சோதனைச் சாவடிகளை அமைத்து வீதிச் சோதனைகளில் ஈடுபடுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்திய அமைதி காக்கும் படையினர் வெளியேறியதும் எவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படுமோவென அச்சம் கொண்டிருந்த மக்கள் மத்தியில் இலங்கை அதிரடிப்படையின் வெளியேற்றமும், கடந்த 48 மணித்தியாலங்கள் நிலவிய அமைதியும் மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையும் புதிய

(4ம் பக்கம் பார்க்க

## முன்னாள் எம். பி.க்களை உத்தியோகபூர்வ வீடுகளில் இருந்துவெளியேறஉத்தரவு

(கொழும்பு)

கெப்பிட்டிபொல தொடர் மாடி வீட்டுத்திட்டத்திலுள்ள உத்தியோகபூர்வ வீடுகளை விட்டு மூன்று தினங்களுக்குள் வெளியேற வேண்டுமென மூன்று முன்னாள் எம் பிக்களுக்கு கொழும்பு நீதிமன்றம் பணித்துள்ளது.

மிஹிந்தலை தொகுதி முன்னாள் உறுப்பினர் தயாவலகம்பாகு, முன்னாள் சப்பிறகமுவ முதலமைச்சரும் இரத்தினபுரி முன்னாள் எம் பி. யுமான ஜீ. வி. புஞ்சி நிலமே, அனுராதபுரம் கிழக்கு முன்னாள் உறுப்பினர் யசபாலஹேரத், முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் ஏ. எம். ஆர். பி. அத்தநாயகா ஆகியோருக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சனசமூக நிலையங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு பாடுபடவேண்டும்

(பளை)

சனசமூக நிலையங்ககள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் போடுவதுடன் நின்று விடாமல் ஏனைய துறைகளையும் வளர்க்க பாடுபடவேண்டும் ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு நிச்சயமாக தேவை நிர்வாகிகள் அப்பகுதி மக்களின்ஒத்துழைப்புடன் கிராமத்திற்கு தேவையான சகல சேவைகளையும் மேற்கொள்ளவேண்டும் அவ்வாறு மேற்கொள்வதால் கிராமத்தின் பல தேவைகள் அரச உதவிகளின்றி சிறப்பாக செய்து கொள்ளமுடியும்.

இவ்வாறு பச்சிலைப்பள்ளி சனசமூகநிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பளை சமூக அபிவிருத்தி அலுவலர் ச சுப்பிரமணியம் தமது தலைமையுரையில் தெரிவித்தார்.

பளை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் க. பாலசுந்தரம் (புலோப்பளை மத்தி ச ச. நிலையம்) தலைவராகவும், பா. ஜோர்ஜ் (இந்திரபுரம் மக்கள் ச. ச நிலையம்) செயலாளராகவும், க. சண்முகதாஸ் (இத்தாவில் சரஸ்வதி ச. ச. நிலையம்) பொருளாராகவும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டனர்

## யாழ்ப்பாணத்தில் எவ். எம். அலைவரிசை ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் எவ்.எம். அலைவரிசை ஒலிபரப்புச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கென ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று அடுத்த வாரம் இங்கு வரவுள்ளது

எவ் எம். அலைவரிசை ஒலிபரப்பை மேற்கொள்ளத் தேவையான 'டிரான்ஸ் மீட்டர்' கருவியை பொருத்தும்

(4ம் பக்கம் பார்க்க)

## விழிப்புலன்அற்றோர்கல்லூரி மட்டுநகரில் நிறுவப்படும்

(மட்டக்களப்பு)

கைதடியில் இயங்குவது போல் விழிப்புலன் அற்றோர் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கென கைதடி விழிப்புலன் அற்றோர் சங்கத்திலிருந்து ஆறு பேரைக் கொண்ட குழுவொன்று மட்டக்களப்பிற்கு விஜயஞ்செய்தது.

இவர்கள் மட்டக்களப்பில் உள்ள விழிப்புலன் அற்ற மாணவர்கள் பற்றிய விபரங்களையும் திரட்டியுள்ளனர்.

## 'கொமன்வெல்த்' மாநாட்டு அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

(கோலாலம்பூர்)

கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்த பொதுநலவாய அமைப்பு (கொமன்வெல்த்)நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட 27 வது மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு.

ஃ அணுகுண்டு வெடி சோதனையை உடனே நிறுத்துதல், முழுமையாக தடை செய்தல் படிப்படியாக அணு ஆயுதங்களை அகற்றிவிடுதல.

ஃ இந்து மகாசமுத்திரத்தை அமைதி மண்டலமாகக் கோரும் ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானத்தை நிறைவேற்ற சர்வதேச மாநாடு ஒன்றை விரைவில் கூட்டுதல்,

ஃ இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் கட்டுப்பாட்டுடன் செயற்படக் கோருதல்.

ஃ கம்பூச்சியாவில் ஒட்டு மொத்தமாக அரசியல் ஒப்பந்தம் ஏற்பட்டு நியாயமான நிரந்தரமான தீர்வு ஏற்படக் கோருதல்.

ஃ ஆப்கானிஸ்தான் பிரச்சினையில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் கொண்ட அரசமைத்து பேச்சுவார்த்தையினால் விரைவில் தீர்க்க வலியுறுத்தல்.

ஃ பயங்கரவாதத்தைத் கண்டித்தல் அதை நிறுத்த உறுதி கூறுதல்.

ஃ போதைப்பொருட்கள் நடமாட்டத்தைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்தல்.

இம்மாநாட்டில் சூடான விவாதம் நடந்தது. தென்னாபிரிக்கா மீது நிதி நிறுவனங்

(4ம் பக்கம் பார்க்க )

## சுன்னாகத்தில் அமைதி ஊர்வலம்

(சுன்னாகம்)

ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட அமைதி ஊர்வலம் ஒன்று நேற்று சுன்னாகத்தில் ஆரம்பித்து மருதனாமடம் வரை சென்றது.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள். இராமநாதன் கல் லூரி மாணவர்கள், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்கள் சுமார் 3,000 பேர் வரையில் கலந்துகொண்ட இவ்வூர்வலத்தில், 'சமாதானமே எங்கள் குறிக்கோள்'' 'கல்வியே எங்கள் செல்வம்', 'எவரும் எமது கல்விக்கு இடையூறு செய்யாதீர்', 'எமக்கு அமைதி தாருங்கள்' போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலத்தினர் முடிவில் மகஜர் ஒன்றை மருதனாமடம் அமைதிப்படை உயர் அதிகாரியிடம் சமர்ப்பித்தனர்.

## கூட்டுத்தாபனங்களில் 'ஜனசக்தி'க்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் ஜனசக்தித் திட்டத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் என கைத்தொழில் பதில் அமைச்சர் திரு. வீரசிங்கா மல்லிமராச்சி கேட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் அமைச்சர் உரையாற்றினார்.

நட்டத்தில் இயங்கிவந்த பல கூட்டுத்தாபனங்கள் இலாபகரமாக இயங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், அதிகாரிகள் சிறப்பாகவும், நேர்மையாகவும் செயலாற்றினால் இவை திறம்பட இயங்கும் எனவும் அவர் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற செயலகத்திற்கு அலைகின்றனர்

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணம் செயலகத்தில் பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்குப் பதிவு இலக்கம், திகதி தெரியாதவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

திரு பஞ்சலிங்கம் அரசாங்க அதிபராக இருந்தபோது நக்கா வீதியில் வைத்து பதிவு இலக்கம் தெரியாதவர்கள். தெரிந்தவர்கள் என இரு பகுதியாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அங்கு பதிவு இலக்கம் தெரியாது விண்ணப்பித்த விண்ணப்பங்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

தனியாரிடமிருந்து போட்டோஸ்ரட் யந்திரங்களைத் தருவித்தும் பிறப்பு இறப்பு சாட்சிப் பத்திரங்களை வழங்கத் துரித நடவடிக்கை எடுத்தார். இதற்காக கச்சேரியில் மகாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஒருவர் தலைமையில் விசேட பணிகளும் நடைபெற்றன.

தற்போது அவை நிறுத்தப்பட்டு, பழையமாதிரியே வேலைகளும் நடைபெறுவதால் பொதுமக்கள் இப்பத்திரங்களைப் பெறுவதற்குத் தினமும் செயலகத்திற்கு அலைந்து திரிகின்றார்கள்.

## வீதி ஒழுங்கில் பொலிஸார்

(சித்தன்கேணியில்)

சித்தன்கேணியில் வீதி ஒழுங்கு வேலைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இடதுபக்கத்தால் செல்வதற்கு பாதசாரிகளுக்கும் வாகனங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

இதே நேரம் இலக்கத்தகடு எடுக்குமாறும் சைக்கிளில் வருபவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டன.

1983ம் ஆண்டுக்கு பின்னர் சிவில் நிர்வாகம் இல்லாத காரணத்தால் வடபகுதி சைக்கிள்களுக்கு இலக்கத்தகடு வழங்கப்படாதது தெரிந்ததே.

## வரிவிளம்பரம்

### கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

யாழ் பஸ் நிலையப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சரவணை கிழக்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை விஜயலெட்சுமி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், கைப்பையும் விடுதலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நெடுந்தீவு மத்தியை சேர்ந்த யாக்கோப்பு மருசிலீன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விடுதலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் விடுதலை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### காணவில்லை

நேற்றுக்காலை வசாவிளானிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட பஸ்சில் ஆலையடியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த போது ''மணிபர்ஸ்'' தவறிவிட்டது. மக்கள் வங்கி புத்தகம், அடைவு ரசீது, மணியோடர், அடையாள அட்டை ஆகியவை அதனுள் உண்டு. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் விடுதலை பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கவும் அல்லது, திருமதி பகவத்சிங்கம் இரத்தினம் 16/2 உடையார் வீதி, பழம் றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## சட்ட விரோத மதுச்சாலைகள் மூடவேண்டும்

(யாழ்ப்பபணம்)

சட்டவிரோதமாக மது விற்பனை செய்கின்ற மதுச்சாலைகளைக்கண்டு பிடித்து அவைகளை மூடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அவசியம் இவ்வாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களின் சமாஜம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்களின் நன்மை கருதி சட்ட விரோத மது விற்பனை நிலையங்களை மூடுவதற்கு சனசமூக நிலையங்கள் முன்வர வேண்டும் எனவும் சமாஜம் கோரிக்கை விடுத்துள்ளது.

## மாணவர்க்கு அடுத்த ஆண்டு உணவுடன்பாலும்கிடைக்கும்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முதல் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது வழங்கப்படும் மதிய உணவுக்கு மேலதிகமாகவே இந்த பால் வழங்கல் திட்டமும் அமுல் செய்யப்படும். இதற்கான நிதியை முழுமையாக வழங்கி உதவ பெல்ஜியம் அரசு முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மாட்டுப் பண்ணைகள் உள்ள பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கப்படும். ஏனைய பகுதிகளில் மாப்பால் வழங்கப்படும்.

## 11 சடலங்கள்

(கண்டி)

கண்டி கட்டுகஸ்தோட்டை பகுதியில் அநாதரவாகக் காணப்பட்ட பதினொரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. வீதியில் சிதறிக்கிடந்த இச் சடலங்களுக்கு அருகில் இரத்தம் தோய்ந்த குறிப்புக்களும் காணப்பட்டன.

## அமைதிப்படை முகாம்

(நாவற்குழி)

கடந்த மூன்று வருடகாலமாக நாவற்குழி வீடமைப்பு திட்டத்தில் முகாமிட்டிருந்த இந்திய அமைதிப்படையினர் அங்கிருந்து வாபஸ் பெற்று நாவற்குழிசண்டிவீதியிலுள்ள பெனிஞ்சுலா தொழிற்சாலையில் முகாமிட்டுள்ளனர்.

## அரசுக்கு தகவல் வருகிறதாம் ஜனசக்திதிட்டத்தில் வருமானமுள்ளவருமுண்டு

(ராழ்ப்பாணம்)

'ஜனசக்தி' திட்டத்தை சில வருமான முள்ளவர்களும் பெற்றுள்ளதாக புள்ளி விபரங்களிலிருந்து அரசுக்கு தகவல் கிடைத்துள்ளன.

வெளிநாடுகளில் இருந்து சிலருக்கு பணம் வருவதும் சில வதந்திகள் மூலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் உண்மையான ஏழைகளுக்கு கிடைக்காமல் வருமான முள்ளவர்களே பெற்றுள்ளனர் எனவே தற்போது வழங்கப்படும் ஜனசக்தியை இடையில் நிறுத்தவும் அரசு ஆலோசித்து வருகிறது.

ஜனசக்தி பெறும் வருமானமுள்ளவர்கள் பற்றிய முறைப்பாடுகள், அவர்கக்கு எவ்வாறு வருமானம் வருகிறதுபோன்ற விபரங்களைத் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கும் திட்டத்தை அமுல் செய்தால் பல உண்மைகள் வெளிவரும் எனவும் அரசுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

## ஆசிரியருக்கு கடிதம்

### சாவகச்சேரி இந்துக்கல்லூரி மதிய உணவு தரமில்லை

ஐயா,

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் வழங்கப்படும் மதிய உணவு அசுத்த நிலையிலும், ஈ மொய்த்த பின்னரும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால் சில மாணவருக்கு வாந்தியும், வயிற்றோட்டமும் ஏற்பட்டுள்ளது.

வீட்டிலிருந்து கொண்டுசெல்லும் உணவை உண்ணக் கூடாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை உணவை சாப்பிடாவிட்டாலும், வாங்கி வீசும்படியும் உத்தரவிடப்படுகிறது பல மாணவர்கள் ரிசு பைக்குள் வாங்கித் தினமும் வீசுகின்றனர்.

இன்றைய அரிசி விலையில் இவ்வாறாக வீணாக உணவு வீசப்படுவது ஏன்? மதிய உணவுக்கு பணிஸ், பிஸ்கட் கொடுக்கமுடியாதா?

சாவகச்சேரி. பலர் கையொப்பம்.

### அமைதி பேணப்படுமா?

ஐயா,

கொக்குவில் கிராம சபையுடன் அமைந்திருக்கும் நூல் நிலையத்தில் மாணவர் படிக்கும் பகுதியிலேயே பத்திரிகைப் பகுதியும் அமைந்துள்ளது இங்கு பத்திரிகை படிக்க வரும் சிலர் சத்தம் போட்டுக் கதைத்து அமைதியாகபடித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு குழப்பம் செய்கின்றனர். இது பற்றி நூல் நிலையப்பொறுப்பதிகாரி எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. அவர்கூட சில வேளைகளில் அங்கு வருபவர்களுடன் சத்தம் போட்டுக் கதைப்பது வழக்கம். இக்குறையை நீக்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

ச. தனபாலன்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

### பிரசவவார்ட் திறக்க நடவடிக்கை எடுக்கவும்

ஐயா!

கைதடியில் அமைந்துள்ள ஆயுர்வேத போதனா வைத்திய சாலை பல கட்டிட வசதிகளைக் கொண்டிருப்பதால் கைதடி, நாவற்குழி, மறவன்புலவுபோன்ற கிராமங்களிலுள்ளமக்களின் நன்மை கருதி மேற்படி வைத்தியசாலையில்ஒரு 'பிரவச வார்ட்' திறக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப் பகுதியினரை வேண்டுகின்றோம்.

குறிப்பிட்டுள்ள வைத்தியசாலையில் பல கட்டிடங்கள் கவனிப்பாரற்ற நிலையிலிருப்பதுடன் 'பிரசவ விடுதி'க் கென ஒரு கட்டிடமும் பிரத்தியேகமாக இருப்பதால் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்துச் செயல்படுமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறோம்.

பொதுமக்கள்.

கைதடி, நாவற்குழி.

## யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்புக்கு நவம். 30வரை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1989-90-ம் ஆண்டு கல்வியாண்டின் பட்டப்பின் படிப்பின் படிப்பிற்காக தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 30-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப் படவுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விபரங்களை பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## மானியம் வெட்டு

(கொழும்பு)

பொருட்களுக்குரிய மானிய விலையை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சர்வதேச நாணயச் சபையிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்கு அரசாங்கம் இச் சபையை அணுகியபோது அவர்கள் பொருட்களுக்குரிய மானிய விலையை அகற்றும்படி அறிக்கை விடுத்தனர் இதனை அரசாங்கம் ஏற்று உறுதி மொழி அளித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட உரம் போன்ற பல பொருட்கள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மானிய விலை நீக்கப்பட்டால் சாதாரண மக்களும், விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முகவர் தபால் நிலையம் அமைக்க புதிய கட்டுப்பாடு அமுல்

(கொழும்பு)

முகவர் தபால் நிலையங்களை அமைப்பதற்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் ஐம்பதினாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் இதற்கு அனுமதிக்கட்டணமாக பத்தாயிரம் ரூபாவே அறவிடப்பட்டு வந்தது.

அத்துடன் இனிமேல் புதிதாக முகவர்கள் தபால் நிலையங்களை அமைக்கும் விடயத்தில் கட்டுப்பாடுகளை விதிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. தபால், தொலைத்தொடர்பு திணைக்களத்தில் இயங்கும் அனைத்து தொழிற் சங்கங்களுடனும் ஆலோசிக்கப்பட்டதன் பின்னரே இனிமேல் புதிய முகவர் தபால் நிலையங்களைத்திறப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

முகவர் தபால் நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு தொழிற்சங்கங்கள் முன்னர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாவற்குழி உணவு களஞ்சியம் மீண்டும்செயல்படும்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் உள்ள உணவுக் களஞ்சியத்தைத் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான கேள்விப் பத்திரங்கள் கட்டிட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கட்டிடத் திணைக்களத்தினால் ஏற்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் முக்கிய உணவுக் களஞ்சியங்களில் ஒன்றாகச் செயல்பட்டு வந்த நாவற்குழிக் களஞ்சியம் கடந்தகால வன்செயல்களினால் சேதமடைந்து தற்பொழுது கைவிடப்பட்டநிலையிலுள்ளது.

இக்களஞ்சியம் திருத்தி அமைக்கப்பட்டதும் ரயில் மூலம் கொண்டு வரப்படும் கோதுமை மா, அரிசி போன்ற உணவுப் பொருட்கள் இங்கு களஞ்சியப்படுத்தப்பட்டு குடாநாட்டிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப் படும்.

## யாழ். நகரில் மோட்டார் சைக்கிள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் மோட்டார் சைக்கிள் திருட்டு மீண்டும் ஆரம்பித்துள்ளது நல்லூரைச் சேர்ந்த நா. குமரகுருபரன் லிங்கம் ஒடையைச் சேர்ந்த கா. தியாகராசா ஆகியோரின் சைக்கிள்கள் இனம் தெரியாதவர்களால் ஆயுத முனையில் அபகரிக்கப்பட்டன.

மாலை நேரம் தனிமையில் சைக்கிளில் வருபவர்களின் சைக்கிள்களும் பயமுறுத்தி அபகரிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5-வது உலகத்தமிழர் பண்பாட்டு மகாநாடு

# றியூனியனில் அடுத்த மாதம் நடைபெறும்!

(றியூனியன்)

இந்து சமுத்திரத் தீவான றியூனியன் தீவில் அடுத்த மாத முதல் வாரத்தில் உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் ஐந்தாவது உலகத்தமிழர் பண்பாட்டு மாநாடு நடைபெறவுள்ளது.

மற்படி மாநாட்டு நடவடிக்கைகளை கவனிப்பதற்காக உலகத்தமிழர் பண்பாட்டு கழகத்தின் தலைவரான மலேசிய நாட்டைச்சேர்ந்த திரு. இரா. வீரப்பன் றியூனியன் செல்வதற்காக பாரிஸ் நகருக்கு சென்றுள்ளார்.

ஐந்தாவது உலகத்தமிழர் பண்பாட்டு மாநாட்டின் அழைப்பாளர் குழுத்தலைவரான றியூனியன் நாட்டைச் சேர்ந்த திரு. தேவகுமாரனைச் சந்தித்து மாநாட்டு ஒழுங்குகளை திரு. வீரப்பன் மேற்கொள்ளுவார்.

பிரெஞ்சு மொழி பயிலும் தமிழர்கள் வதியும் நாடொன்றில் உலகத்தமிழர்பண்பாட்டு மாநாடு நடைபெறுவது இது இரண்டாவது தடவையாகும், ஏற்கனவே மொரிஷியஸ் நாட்டில் இந்தக் கழகத்தினரால் 1983-ல் உலகத்தமிழர் பண்பாட்டு மாநாடு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சோவியத் திரைப்பட விழா யாழ். நகரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

சோவியத் திரைப்படவிழா அடுத்தவருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு, கண்டி, காலிஆகிய இடங்களிலும் இந்த திரைப்படவிழா இடம்பெறும்.

தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம். சோவியத் தூதுவராலயம், தகவல்துறை அமைச்சு என்பன கூட்டாகச்சேர்ந்து சோவியத்திரைப்பட விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

## ஜானகி அம்மாள் நாடு திரும்பினார்

(சென்னை)

மருத்துவ சிகிச்சையொன்றின் பொருட்டு கடந்த ஆறு மாதங்களுக்குமுன்னர் அமெரிக்கா சென்றிருந்த தமிழக முன்னாள் முதல்வர் திருமதி ஜானகிராமச்சந்திரன் நேற்று முன்தினம் சென்னை திரும்பினார்.

## இவர்களுக்கு அப்படி என்ன குறை? பறவைகள் தற்கொலை அதிகரிப்பு; தடுத்துநிறுத்த அரசுமுயற்சி

(புதுடில்லி)

இந்திய அசாம் மாநிலத்தில் அதிகரித்துவரும் பறவைகளின் தற்கொலைச் சம்பவங்களைத் தடுக்க விலங்கியல் அதிகாரிகள் பெரும் முயற்சிகளை எடுத்துவருகின்றனர்.

இந்த மாநிலத்தில் உள்ள ஜதிங்கா காட்டிலேயே பறவைகளின் தற்கொலைச் சம்பவங்கள் அதிகமாக இடம் பெற்றுவருகின்றன.

பிற மாநிலங்களிலிருந்து ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் இப்பகுதிகளுக்குப் படையெடுத்துவரும் ஆயிரக்கணக்கான பறவைகள் எரியும் தீயில் வீழ்ந்தும், பட்டினி கிடந்தும் தற்கொலை செய்து கொள்கின்றன.

கடந்த ஆண்டு தற்கொலை செய்துகொண்ட பறவைகளில் அனேகமானவை புதுடில்லியிலுள்ள சரணாலயத்தைச் சேர்ந்தவை. ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் பறந்து இக்காட்டுக்குள் வந்து இவை தற்கொலை செய்துள்ளன.

இப்பறவைகள் ஏன் தற்கொலை செய்துகொள்ளவேண்டும்? அதுவும் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரம் பறந்து இப்பகுதிக்கு வந்து அவை ஏன் தற்கொலை செய்ய வேண்டும்? என்ற வினாக்களுக்கு விடை காணமுடியாது விட்டாலும் இந்தத் தற்கொலைகளைச் செயற்கைமுறைகளைக் கையாண்டு தடுத்து நிறுத்தும் முயற்சியில் விலங்கியல் வல்லுனர்கள் தற்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இக்காட்டுப் பகுதியில் உயர்ந்த விளக்குக் கோபுரங்களை அமைப்பதன் மூலம் தற்கொலை செய்யவரும் பறவைகளைத் திசைதிருப்பவும், உணவுப் பொருட்களைத் தூவுவதன் மூலம் பறவைகளின் பட்டினியைப் போக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்

## உலக செஸ் சாம்பியன் கம்பியூட்டரை வென்றார்!

(நியூயோர்க்)

உலகசெஸ் சாம்பியன கஸ்பரோவ் தன்னுடன் போட்டியிட்ட உயர்தர செஸ் கம்பியூட்டரை மிக இலகுவாக தோற்கடித்தார்.

மனிதனுக்கும், கம்பியூட்டருக்கும் இடையேயான இப்போட்டி நியூயோர்க் கலாபவனத்தில் நடைபெற்றது. கம்பியூட்டருக்குச் சாதகமான முறையில் 1500 நிமிட நேரம் விளையாட்டு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் 90 நிமிடத்தில் கஸ்பரோவ் அதனைத் தோற்கடித்தார்.

கஸ்பரோவ் விளையாடிய முறையினால் கம்பியூட்டருக்கு சிறந்த முறையில் விளையாடமுடியவில்லை என அதனை நிர்மாணித்த நிறுவனம் தெரிவித்தது ஆனால் இந்த கம்பியூட்டர் ஏற்கனவே பல சிறந்த செஸ் ஆட்டக்காரர்களைத் தோற்கடித்துள்ளது,

## கடத்தல் முயற்சி தோல்வி: அகப்பட்டதமிழ்பெண்ணுக்கு 9 லட்சம் ரூபா அபராதம்!

(கொழும்பு)

மூன்று லட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டாலர் நோட்டுக்களை கள்ளத்தனமாக எடுத்துச்செல்ல முயன்ற தமிழ்ப்பெண்மணியொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இப்பெண்மணி இந்த டாலர் நோட்டுக்களை சிங்கப்பூருக்கு கடத்திச் செல்ல முற்பட்ட சமயமே பெண்பாதுகாப்பு அதிகாரியினால் கைது செய்யப்பட்டார் இவருக்கு பின்னர் ஒன்பது லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## அமெரிக்க உதவி கிடைக்கும்

(வாஷிங்டன்)

ஹங்கேரி, போலந்து ஆகிய நாடுகளுக்கு 837 மில்லியன் அமெரிக்க டாலர்களை உதவியாக வழங்குவதற்கு அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மலையேற்றவீரர் காலமானார்

(காட்மண்டு)

நேபாளத்தைச்சேர்ந்த மலையேற்ற வீரர் சுக்தர் சேவா தமது முப்பத்திமூன்றாவது வயதில் காலமானார்.

1979, 1981' 1982, 1985, 1988இல் இமயத்தின் எவரெஸ்ட் சிகரத்தை இவர் சென்றடைந்தது குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீன தூதரகம்

(லண்டன்)

இந்தோனேசியத் தலைநகரான ஜகார்த்தாவில் பலஸ்தீனிய அரசின் தூதரகம் ஒன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனிய விடுதலை இயக்கின் பகுதித் தலைவர் பாருக் கடோமி இந்தோனேசியாவுக்கு விஜயஞ்செய்து தூதரக அலுவலகத்தில் பலஸ்தீன அரசின் கொடியை ஏற்றிவைத்தார்.

## ரஷ்யாவில் வெளிநாட்டவர் வேலைசெய்ய அரசு அனுமதி

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் வெளிநாட்டுத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த தற்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சோவியத் யூனியனில் வேலைக்கு ஆட்பலம் குறைவாக இருப்பதை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்புதிய முடிவுக்கு அமைய வியட்நாம், வடகொரியா மற்றும் சீன தொழிலாளர்கள் தற்பொழுது முதல் தடவையாக சோவியத் யூனியனில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலக்ரோணிக் மற்றும் மோட்டார் வாகனத் தொழிற்சாலைகளிலும் நெசவு ஆலைகளிலும் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

இந்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்படுவதற்கு முன்னர் அவர்களுக்கு மொழிப்பயிற்சியும், தொழிற்பயிற்சியும், வழங்கப்படுகிறது.

## சூறாவளி தூக்கிச்சென்றது

(லண்டன்)

தைவானில் அண்மையில் வீசிய கடும் சூறாவளியை அடுத்து பலர் காணாமல் போயுள்ளனர். இந்தசூறாவளி தரையிலிருந்து பலரை அப்படியே தூககிச் சென்று கடலில் வீசி விட்டதாம்.

அத்துடன் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கி மரணமடைந்தும படுகாயமுற்றும் உள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## சினிமா ஊழியர் கோரிக்கை பண்டிகைமுற்பணம்ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவை ஒருவரைச் சேவையில் அமர்த்திய நாளிலிருந்து வழங்கப்படவேண்டும்.

ஐக்கிய சினிமா, பிலிம்ஸ் ஸ்ரூடியோ ஊழியர் சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்கள் அண்மையில் யாழ் நகரில் கூடி மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இக்கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட பிற தீர்மானங்கள் பின்வருமாறு.

சனிக்கிழமைகளில் 5 மணி நேர வேலை, விடுமுறைத் தினங்களில் வேலைசெய்தால் மேலதிக ஊதியம்,

ஞாயிற்றுக்கிழமை, போயா தினங்கள், விடுமுறைத் தினங்களில் முழு ஒய்வு, வருடாந்த லீவு 35 நாட்கள்

பண்டிகை முற்பணம் ஆயிரம் ரூபா.

வெளிப்புறப் படப்பிடிப்புக்குப் போகும் ஊழியர்க்கு நாளாந்த பட்டா 190ரூபா போக்குவரத்துச் செலவும் வழங்கப்படவேண்டும்.

வரையறுக்கப்பட்ட பிரகாரம் கடமையில் தொழிலாளரை ஈடுபடுத்தவேண்டும்.

வருடாந்த சம்பள உயர்வு 100 ரூபா.

லீவு எடுக்காதவர்களுக்குச் சம்பளம் வழங்கவேண்டும்

## எரி வாயு குழாய் வெடிப்பினால் ஊழியர் பலர் பாதிப்பு

(மாஸ்கோ)

மேற்கு சைபீரியாவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் எண்ணெய் வாயுக்குழாய் ஒன்று வெடித்ததில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டியூமென் என்ற பகுதியில் உள்ள டொபோல்ஸ்க் என்ற இடத்தில் இடம்பெற்ற இவ் விபத்தில் எவரும் உயிரிழக்கவில்லையாயினும் பலர் உளரீதியான பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

உலகின் மிகப்பெரிய எண்ணைக்கிணறுகள் அமைந்துள்ள இப்பகுதி குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற இடம்போல் காட்சியளிக்கின்றது. அப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## இலங்கையைப்பற்றி வெளிநாடுகளில் பொய்ப் பிரசாரம்

(கொழும்பு)

இலங்கையைப்பற்றி வெளிநாடுகளில் தவறான செய்திகள் பரப்பப்படுவதால் அவற்றை முறியடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் இதற்கான தனிப்பிரிவு ஒன்று செயற்படவுள்ளதாக அரச அதிகாரி ஒருவர் கூறினார்.

இதுபற்றி தூதரகங்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் இலங்கையின் இயற்கை காட்சிகள் பற்றிய கண்காட்சிகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு உதவிப்பணம் கிடைக்கும்

(திருமலை)

கடந்தகால வன்செயல் சம்பவங்களின்போது குடும்பத்தலைவனை அல்லது குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

முதலில் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இவ்வாறான நிதியுதவியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திருகோணமலையில் குடும்ப உறுப்பினர்களை இழந்த 253 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. இதற்கென எழுபத்தி ஐந்து லட்சம் ரூபா புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை

# வீதிகளின் அவல நிலை

வடக்கு கிழக்கிலுள்ள வீதிகள் யாவும் திருத்தவேண்டிய நிலையிலேயே உள்ளன தார் போட்ட வீதிகள் கல்லு ரோட்டாகவும், கல்லு ரோட்டாக இருந்த வீதிகள் மணல் ஒழுங்கைகள் போன்றும் காட்சியளிக்கின்றது. இப்பகுதிகளிலுள்ள பிரதான வீதிகள் குண்டும், குழியுமாகத் தோற்றமளிக்கின்றது இருண்டால் வாகனங்களில் இவ்வீதிகளால் போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு சிரழிந்துபோயுள்ளது. மாரி காலம் அண்மித்து வரும் இச்சந்தர்ப்பத்தில் மாகாண அரச அதிகாரிகளும் மாநகர, நகர சபை உத்தியோகத்தர்களும் இவ் வீதிகளை மீளவும் செப்பனிடுவதற்கு தடல்புடலான முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கு கிழக்கில் வன்செயல்கள் ஏற்பட்ட பின்னால் பெரும்பாலான வீதிகளில் சிறிய திருத்தவேலைகள் கூட மேற்கொள்ளவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும் உள்ளூராட்சி மன்றங்கள் மட்டும் தமக்கு கிடைக்கும் வரிப்பணத்திலிருந்து சொற்ப தொகையை வீதிபராமரிப்புக்கென ஒதுக்கி, பள்ளங்கள் நிரப்புவதும், மண்போடுவதுமாக, பட்டும் படாமல் வேலைகளை மேற்கொள்வது வழக்கம் ஒதுக்கப்படும் பணத்தில் அரைப் பங்கு தான் வீதிகளுக்குச் செலவு செய்யப்படும். மீதி கொந்தராத்துக்காரர்களிலிருந்து மேல்மட்ட உத்தியோகத்தர்கள் வரை கைமாறிப் போவது மக்கள் அறியாத ஒன்றல்ல

பெரிய வீதிகளின் திருத்தத்துக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து லட்சக்கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதிலும் வீதிகள் மறுவருடமும் திருத்த வேண்டிய நிலையிலேயே இருப்பது வழமையாகும். திருத்த வேலைகளுக்கு முன்னர் அப்பகுதித் தொழில் நுட்ப உத்தியோகத்தரால் தேவைப்படும் நிதி தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் அப்பணம் முழுமையாக வீதிக்கு பயன்படுத்தப்படுவது கிடையாது. இதுவே வீதிகள் மீள அமைக்கப்பட்டும், குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே அவ்வீதிகள் பழைய நிலைக்கு வருவதற்குக் காரணியாக அமைந்து விட்டது

வீதி வேலைகளை கொந்தராத்து எடுப்பதற்கென்றே பலர் இருக்கின்றனர். மேலிருந்து கீழ் வரையான அரச உத்தியோகத்தர்கள் யாவரும் இத்தகைய கொந்தராத்துக்காரர்களால் 'சந்தோஷப்'படுத்தப்பட்டவர்களாகவே இருப்பர் இதனால் நிதி ஒதுக்கீட்டின்போது குறிப்பிடப்பட்டிருக்கும் விதத்தில் வேலைகள் ஒருபோதும நடைபெறுவது கிடையாது. ஊழல், லஞ்சம் என்பதெல்லாம் இவ் இலாக்காக்களோடு இரண்டறக் கலந்துபோனவை. இவைகளில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தாமல் வீதிகளில் மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது.

இதுகாலவரை மத்திய அரசின் பரிபாலனத்தின் கீழ் சரியான மேற்பார்வையின்றி, நடைபெற்ற இவ்வேலைகள், மாகாண அரசின் கீழும் முன்னைய நிலையிலேயே தொடரப் போகின்றதா? மாகாண அரசும், அதன் உறுப்பினர்களும், இவ்விடயத்தில் கூடிய சிரத்தை எடுத்து, முந்தியநிலை இனியும் தொடராது பார்க்கவேண்டியது அவர்கள் கடமையாகும், வீதிகள் செப்பனிடப்படும்போது நேரடிக் கண்காணிப்பு மிகவும் அவசியம்.

வீதிகளைத் திருத்தும் வேலைகளோடும்கூட மாகாண அரசுக்கும், மத்திய அரசுக்குமிடையே இழுபறிநிலை தொடர்கின்றது மாகாண அரசைப் பொறுத்தவரை நெடுஞ்சாலைகள் மட்டும் மத்திய அரசின் வசம் இருக்குமெனவும், ஏனைய வீதிகள் எல்லாம் மாகாண அரசின் கீழ் வருமெனக் கூறப்படுகின்றது இதனாலும் குறிப்பிட்ட மூக்கியமான வீதிகளைத் திருத்துவதில் இழுபறிநிலை தோன்ற இடமுண்டு.

வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வினைப் போலவே வடக்கு கிழக்கின் வீதிகளும் மேடும் பள்ளமுமாகக் காட்சி கொடுக்கின்றது.

எமது வீதிகளைச் சீர்படுத்துவதில் கூடிய கவனமெடுக்க வேண்டிய பொறுப்பு முழுமையாக மாகாண அரசையே சார்ந்ததாகும் மாகாண அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சமயம் காங்கேசன்துறையிலிருந்து பொத்துவில் வரைக்கும் வடக்கையும், கிழக்கையும் இணைத்த கடற்கரையோரப் பாதை ஒன்றை அமைப்பது தொடர்பாக வெளியிடப்பட்ட யோசனைகளையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறோம்

மாரிகாலம் நெருங்கிக்கொண்டிருப்பதால், சம்பந்தப்பட்ட எல்லா உத்தியோகத்தர்களும் வீதிகள் திருத்தும் வேலைகளை துரித வேகத்தில், நேர்மையாகவும், நாட்டுப் பற்றுடனும் செய்ய முன்வரவேண்டும்.

## மாகாண சபையிடம் மக்கள் புகார்

# மூளாய் பஸ் சேவையின்றி கர்ப்பிணிகள் பெரும் அவதி

(அச்சுவேலி)

தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு வரும் அச்சுவேலி, வசாவிளான், குப்பிளான் குரும்பசிட்டி பகுதி மக்கள் தட்டி வானை நம்பியே இருக்க வேண்டியுள்ளது

இப்பகுதியூடாகச் செல்லும் வீதியும் திருத்தப்பட்டு விட்டது. நாட்டு நிலைமையும் சீராக வரும்போது வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்னமும் இப்பகுதியூடாக மூளாய் பஸ் சேவையை நடத்தாதது ஏன் என்று இப்பகுதி மக்கள் மாகாண சபையிடம் புகார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு வரும் மூளாய், பண்டத்தரிப்பு, அளவெட்டி பகுதி மக்களின் வசதிக்காக காரைநகர் டிப்போ காங்கேசன்துறை வரையும் புதிய பஸ்சேவையை ஆரம்பித்திருக்கும்போது பருத்தித்துறை டிப்போ மூளாய் பஸ் சேவையை ஆரம்பிக்காமல் இருப்பது ஏன் எனவும் இப் பகுதி மக்கள் கேட்கின்றனர்.

தேவையில்லாத இடங்களுக்கும், சிலரின் வசதிக்காகவும் மூன்று நான்கு பேருடன் சில பஸ்சேவை நடாத்தப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கர்ப்பிணி பெண்களின் கிளினிக் நாட்களிலாவது மூளாய் பஸ் சேவையை நடாத்தக்கூடாதா எனவும் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

## 50 லட்சம் கப்பம் கேட்டதால் 500 தொழிலாளர் நிர்க்கதி

ஐம்பது லட்சம் ரூபாவைத் தமக்கு கப்பமாகத் தருமாறு 'ஆயுதக்குழு ஒன்று' நாவற்குழியில் உள்ள கடல் உணவு பதனிடும் நிறுவனத்தை வற்புறுத்தியது. இதனால் இந்நிறுவனத்தில் வேலை செய்து வந்த 500 தொழிலாளர்கள் வேலையை இழந்தனர்.

நமது நாட்டில் உள்ள கடல் உணவு பதனிடும் நிறுவனங்களிலே முன்னணி வகித்துக்கொண்டிருக்கும் நாவற்குழி கடல் உணவு பதனிடும் நிறுவனத்துக்கு ஆயுதங்களுடன் திடீரென புகுந்த குழுவினர் தமக்கு 50 லட்சம் ரூபா தரவேண்டும் என்றும், தரத்தவறின் இயங்க விடமாட்டோம் எனவும் நிறுவனத்தின் முகாமையாளரிடம் கூறினர். முகாமையாளர் இதுவிடயமாக நிறுவனத்தின் மேலிடத்தினருடன் பேசவேண்டும் என்றார். அதற்கு குழுவினர், எமக்கு வேறு கதை வேண்டாம் நாம் கேட்ட பணத்தை நாளைக்குத் தந்து விடவேண்டும்' என்று கூறிச் சென்றனர்.

## உங்களுக்குத் தெரியுமா?

பின்பு, 'கப்பப்பணம்' கட்டாததினால் ஆயுதக்குழுவினர் முகாமையாளரைக்கடத்திச்சென்றனர். நிறுவனம் மூடப்பட்டது. இதனால் இந்த நிறுவனத்தில் வேலை செய்து வந்த 500 தொழிலாளர்கள், பெரும்பாலும் ஏழைப்பெண் தொழிலாளர்கள் வேலையை இழந்தனர்.

கடத்திச் செல்லப்பட்ட முகாமையாளர் விடப்பட்டு மேற்படி நிறுவனம் தற்போது திறக்கப்பட்டுள்ளபோதிலும், வேலையில்லாமல் இருந்த 500 தொழிலாளர்களுக்கும் வேலை செய்யாத காலத்தில் ஏற்பட்ட இழப்புக்களை நிவர்த்தி செய்வது யார்?

கட்டாயக் கப்பம் வாங்கும் இக்குழுவுக்கு தொழிலாளர் நிலை தெரியுமா? அல்லது புரியுமா?

எமது மக்களே தீர்ப்புக் கூறுங்கள்!

## இடமாற்றம்

(சாவகச்சேரி)

வடக்கு கிழக்கு மாகாண அரச உள்ளூராட்சி மன்றங்களில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றல் பட்டியல்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபையின் கடமையாற்றும் எட்டு உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றல் அறிவித்தல் கிடைத்துள்ளது.

இவ்விடமாற்றங்கள் 10-10-1990 தொடக்கம் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## நேருகிண்ண நேற்றையபோட்டிகளில்

### இந்தியா, அவுஸ்திரேலியா, மே.இந்திய தீவுகள் வெற்றி

(சென்னை)

நேரு கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று மூன்று இடங்களில் ஒரே நேரத்தில் மூன்று போட்டிகள் நடைபெற்றன அதாவது போட்டியில் கலந்துகொளும் ஆறு நாடுகளுமே நேற்றுப போட்டிகளில் கலந்துகொண்டு விளையாடின.

கான்பூரில், இப்போட்டிகளில் 12 புள்ளிகள் எடுத்து முன்னணியில் உள்ள இங்கிலாந்தை இந்தியா வெற்றி கொண்டது. வழமைக்குமாறாக நாலாவது ஆட்டக்காரராக உள்ளே நுழைந்த சேதன் சர்மா அபாரமாக விளையாடி 101 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்து இந்தியாவின் வெற்றிக்கு வழிகோலினர்.

கோவாவில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா இலங்கை அணியை 28 ஓட்டங்களால் தோற்கடித்தது.

ஜலந்தரில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தான் அணியை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

இதன்படி இப்போதைய புள்ளி நிலவரம்; இங்கிலாந்து 12 புள்ளிகளுடன் முன்னணியிலும், இந்தியா, அவுஸ்திரேலியா, மே, இந்தியா ஆகியவை தலா 8 புள்ளிகளாலும் பாகிஸ்தானும் இலங்கையும் தலா 4 புள்ளிகளுடனும் உள்ளன. நாளை 27ந் திகதி பெங்களூரில் அவுஸ்திரேலியாவை எதிர்த்து இந்தியாவும், லக்னோரில் பாகிஸ்தானை எதிர்த்து இலங்கையும், குவாலியூரில் மேற்கிந்திய தீவுகளை எதிர்த்து இங்கிலாந்து அணியும் விளையாடும்

## கொமன்வெல்த்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் மூலம் மேலும் தடைகளை கொண்டுவர இம்மாநாடு தீர்மானித்துள்ளது. இங்கிலாந்து பிரதமர் தட்சர் இதை ஏற்கவில்லை. தடைகளுக்கு ஆதரவாக மாநாடு அறிக்கை வெளியிட்ட அதேசமயம் தட்சர், அதற்கு எதிராக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகளை இக்குழுவினர் மேற்கொள்ளுவர்.

இந்த அமைப்பு வேலைகள் பூர்த்தியானதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை நிகழ்ச்சிகளை வட மாகாண நேயர்கள் எவ். எம். ஒலிபரப்பில் மிகத் தெளிவாகக் கேட்கக் கூடியதாகவிருக்கும்.

## அம்பாறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கைகளை ஏற்படுத்தியிருப்பதை நன்கு அவதானிக்க முடிகின்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபா, வடக்கு, கிழக்கு மாகாண நிதியமைச்சர் திரு. பெ. கிருபாகரன் ஆகியோர் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசிய இராணுவம், மக்கள் தொண்டர்படை கூட்டாக முகாமிட்டுள்ள இடங்களுக்கு விஜயஞ்செய்து நிலைமைகளை அவதானித்தனர்.

கல்முனை வாடி வீட்டுக் கட்டடத்திலுள்ள தமிழ் தேசிய இராணுவத்தின் மாவட்ட தலைமையகத்திற்கும் திரு. பத்மநாபாவும், திரு. கிருபாகரனும் விஜயம் செய்து, முஸ்லீம் மக்களின் அமைதியானதும், வழமையானதுமான வாழ்க்கையை உறுதிப்படுத்த வேண்டுமென மாவட்ட தளபதி ஜனுப் காலித் அவர்களைக் கேட்டுக்கொண்டதாகவும் அறிய முடிகின்றது.

தமிழ், முஸ்லீம் மக்கள் இம் மாவட்டத்தில் மிகுந்த ஒற்றுமையோடும் மக்களை பாதுகாக்கும் பணியில் தமிழ் தேசிய இராணுவத்துக்கும், மக்கள் தொண்டர் படையினர்க்கும் பூரண ஒத்தாசை வழங்கி வருகின்றனர். அதே சமயம் தமிழர் தேசிய இராணுவம் மக்களைப் பாதுகாக்கும் பணியில் சுறு சுறுப்பாக ஈடுபட்டிருப்பதை காண முடிந்தது.

### அடுத்த கட்ட

# படை விலகல் குறித்து நவம்பரில்தீர்மானிக்கப்படும்

(கொழும்பு)

இந்தியப்படைவிலகல் திட்டத்தின் கீழ் அடுத்த கட்டமாக எந்தமாவட்டத்திலிருந்து அமைதிப்படையினரை விலக்கிக்கொள்வது என்று குறித்து நவம்பர் முதல்வாரத்தில் தீர்மானிக்கப்படுமென இந்திய தூதரக அரசியல் செயலாளர் டாக்டர் ஜெயசங்கா கொழும்பில் தெரிவித்தார்.

இதனிடையே இந்தியத் தூதுவர் திரு. லவன் மேஹேந்திரா புதுடில்லி சென்றுள்ளார். படைவிலகல் தொடர்பாக அடுத்த நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளவே அவர் அங்கு சென்றதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 26-10-1989ல் வெளியிடப்பட்டது.

தொலைபேசி 291

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org